(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** | **24 UTM 101**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2024**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 75**

**முதல் பருவம்** **நேரம் : 3 மணி**

**பகுதி – 3**

**இக்கால இலக்கியம்**

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. சுப்பிரமணியன் எனும் இயற்பெயர் கொண்டவர் யார்?
   (அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) கண்ணதாசன் (ஈ) வண்ணதாசன்
2. “ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்” – யாருடைய நூல்?
   (அ) குட்டி ரேவதி (ஆ) தாமரை (இ) சல்மா (ஈ) வெண்ணிலா
3. கே.எம்.சண்முகத்தின் சிறுகதைத் தொகுப்பைக் குறிப்பிடுக.
   (அ) அறம் (ஆ) கைரதி (இ) தாயம்மா (ஈ) ஆகாசக்குதிரைகள்
4. கரிசல் இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?
   (அ) கு.ப.இராசகோபாலன் (ஆ) புதுமைப்பித்தன் (இ) பூமணி (ஈ) கி.இராஜநாராயணன்
5. வெ.இறையன்பின் நூலைக் குறிப்பிடுக.
   (அ) அரிதாரம் (ஆ) அஞ்ஞாடி (இ) ஔவை (ஈ) கிறுக்கல்கள்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. கவிஞர் சிற்பி பணியாற்றிய கல்லூரியின் பெயரைக் குறிப்பிடுக.
7. கே.எம்.சண்முகத்தின் முதல் சிறுகதை நூல் எது?
8. கி.ராஜநாராயணன் பிறந்த ஊர் எது?
9. உம் பாடப்பகுதியில் அமைந்த பாரதிதாசனின் நூல் எது?
10. ஓடும் நதியின் ஓசை எவ்வகை நூல்?

**(த.பி.பா.)**

*ETHICAL PAPER*

**பகுதி – ஆ** (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.(K3)**

11. (அ) நேயர்விருப்பத்தில் ‘மண்’ கவிதை உணர்த்தும் உழைப்பின் சிறப்பை எழுதுக.

**(அல்லது)**

(ஆ) நியூட்டனின் மூன்றாம்விதி கவிதை உணர்த்தும் வாழ்தலின் சிக்கலை விளக்குக.

12. (அ) ‘கலாச்சாரம்’ - கதையின் வழி அமெரிக்காவின் துப்பாக்கிச்சூடு நிகழ்வை எழுதுக.

**(அல்லது)**

(ஆ) ‘அன்பேசிவம்’ கதையில் தேன்மொழியின் அன்பை விளக்குக.

13. (அ) ‘கோபல்ல கிராமம்’ – புதினம் குறித்து எழுதுக.

**(அல்லது)**

(ஆ) கி.ராஜநாராயணன் - குறிப்பு வரைக.

14. (அ) ஆட்டனத்தி குறித்து எழுதுக.

**(அல்லது)**

(ஆ) நெய்தலி கதாப்பாத்திரத்தை விளக்குக.

15. (அ) ‘ஓடும் நதியின் ஓசை’ – பெயர் விளக்கம் தருக.

**(அல்லது)**

(ஆ) ‘ஓடும் நதியின் ஓசை’ நூல் உணர்த்தும் சமூகப் பிரச்சினைகள் சிலவற்றைக் கூறுக.

**பகுதி – இ** (5 x 8 = 40)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.**

(K4& K5)

16. (அ) பாண்டியன் பரிசில் இடம்பெற்றுள்ள கதாப்பாத்திரங்களை விளக்குக.

**(அல்லது)**

(ஆ) பாஞ்சாலியின் சபதத்தை விவரி.

17. (அ) ‘தாயம்மா’ சிறுகதைத் தொகுப்பில் நீ விரும்பும் கதையைத் திறனாய்வு செய்க.

**(அல்லது)**

(ஆ) தாயம்மா, காப்பான், பயணம் - இம்மூன்று கதைகளின் கதைக்கருவினை விளக்குக.

18. (அ) கோபல்லகிராமத்து மக்கள் காடழித்து விவசாயம் செய்த முறையை விவரி.

**(அல்லது)**

(ஆ) கோபல்லகிராமத்தின் காலைக்காட்சிகளை விரித்துரைக்க.

19. (அ) ஆட்டனத்தி ஆதிமந்தி காதலைக் கட்டுரைக்க

**(அல்லது)**

(ஆ) ஆட்டனத்தி ஆதிமந்தி வழியே கண்ணதாசனின் சொல்லாட்சியை எடுத்து மொழிக.

20. (அ) இறையன்பு குறிப்பிடும் முதுமைப் பிரச்சனைகளை நூல்வழி எடுத்துரைக்க.

**(அல்லது)**

(ஆ) மூடநம்பிக்கை குறித்த இறையன்புவின் கருத்தாடல்களை கட்டுரைக்க.



******